
# தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் பற்றி தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடல்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பதற்காகத் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கலந்துரையாடவுள்ளது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்று வவுனியா தனியார் விடுதியில் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 26 திங்கட்கிழமை 08.04.2024 கதிர் 223






## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதில் தலைவரானார் நிமல்

### இன்றைய அவசர கூட்டத்தில் முடிவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அவசர அரசியல் குழுக் கூட்டம் இன்று முற்பகல் இடம்பெற்றது.

இன்றைய அவசர கூட்டத்தில் கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பங்கேற்றிருந்தார்.

கட்சியின் தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைமைப் பதவியை வகிப்பதற்குக்

2➤

## வாக்குப் பிச்சை கேட்க அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர்! வடக்கு - கிழக்கு மக்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் வாக்குப் பிச்சைக்காக தென்னிலங்கை அரசியல்வாதிகள் படையெடுக்கும் நிலையில் எமது இருப்பினை பலப்படுத்த வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும், என இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் எம்பியுமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இன்று மதியம் யாழ் நகரில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் பின்னர் இந்த ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட்பாளர் தொடர்பாக சிந்திக்கப்பட்டது. இருந்தும் அது தொடர்பாக பெரிதாக கடந்த தேர்தல்களில் பேசப்படாவிட்டாலும் இம்முறை பொது வேட்பாளர் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.

பொது வேட்பாளர் இல்லாத பட்சத்தில் பல மக்கள் இம்முறை வாக்களிக்காமல் இருப்பதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. பெரும்பான்மை இனத்தில் சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க அனுரகுமார திசாநாயக்க, தற்பொழுது ராஜபக்சகளும் தயாராக இருக்கின்றார்கள் .

எனவே, இவ்வாறாக வாக்குகள் பெரும்பான்மை இனத்தில் பிரிந்து போகின்ற பட்சத்தில் நிச்சயமாக முடிவெடுக்க வேண்டிய வாக்காளர்களாக தமிழ் மக்கள் இருக்கப் போகின்றார்கள். எனவே, தமிழர்களை எவ்வாறு அரவணைத்துச் செல்லலாம்? தமிழர்கள் மீது எவ்வாறு பூச்சூடி ஆசனத்தை பெறலாம்? என அவர்கள் இனி சிந்திக்க தொடங்குவார்கள்

அனுரகுமார திசாநாயக்க யாழ் மாவட்டத்திற்கு அண்மையில் வருகை தந்திருந்தார். எந்தவிதமான தமிழர்கள் சார்ந்த உரிமைக்கான உத்தரவாதத்தினையும் அவர் வழங்கவில்லை. இதில் மிகக் கேலியான விடயம் என்னவெனில், தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து விட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமாம்! இது எவ்வாறு இருக்கின்றது என்றால், அபிவிருத்தி அடைந்து விட்டால் வேறு எந்த பிரச்சனையும் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

2➤

## கெஹெலிய உள்ளிட்ட ஏழு பேருக்கு 22 வரை தொடர்ந்து விளக்கமறியல்



தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் தொடர்புடைய நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 7 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த 28 ஆம் திகதி மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது சந்தேகநபர்கள் 7 பேரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

2➤

## பரஸ்பர துப்பாக்கிச்சூட்டில் விமானப் படைச் சிப்பாய் பலி

பாதுக்கை - அங்கமுவ பகுதியில் பொலிஸாருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது விமானப் படையின் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் விமானப் படை விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விமானப் படையின் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

2➤

## நாளை கூடுகின்றது பொதுஜன பெரமுன

ஜனாதிபதித் தேர்தல் உட்பட அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் ஆராய்ந்து, தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் விசேட கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் பங்கேற்புடன் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது.

மே தினக் கூட்டம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

## சு. கவின் செயற்குழுவின் தீர்மானங்களை தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவு நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்களைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவை எதிர்வரும் 24ஆம் திகதி வரை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீடித்துள்ளது.

துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரைக் கட்சிப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்களை தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவையே எதிர்வரும் 24ஆம் திகதி வரை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீடித்துள்ளது. (அ)

## ஸ்ரீலங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விதித்துள்ளது. இதனையடுத்தே, கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் அவசரமாகக் கூடப்பட்டு நிமல் சிறிபால டி சில்வா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையால் ஈடுபடுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறி வருகின்றார். மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளிலும் அவர் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

அதேவேளை, நீதிமன்றத்தில் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்து மீண்டும் கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்பேன் என்று மைத்திரிபால சிறிசேன சவால் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் குழுக்களை அமைக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். 8 மாவட்டங்களுக்குமான குழுக்கள் இந்த மாத இறுதியில் அமைக்கப்படும். இதன் பின்னர் அனைத்து மாவட்டக் குழுக்களையும் ஒன்றுகூட்டி கூட்டமொன்றை வவுனியாவில் மே மாதம் 25 ஆம் திகதி நடத்தவுள்ளோம். இதனூடாக கிராம மட்டத்தில் எமது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைக் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் தொடர்பாக நாம் கொள்கை ரீதியில் முடிவெடுத்துள்ளமை தொடர்பிலும் ஏனையவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். தற்போது இவ்விடயம் இங்கும் புலம்பெயர் தேசத்திலும் பேசுபொருளாக மாற்றப்பட்டுள்ளது. சில சிவில் அமைப்புக்களும் இதனை முன்னெடுத்து செல்லும் பணியை செய்கின்றனர்.

அந்தவகையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளுடன் பேசவுள்ளோம். அத்துடன் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் முக்கிய அமைப்புக்களுடனும் கலந்துரையாடவுள்ளோம்.

அதற்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள அணியொன்று செயற்படும். இவர்கள் தமிழரசுக் கட்சி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் பேச விரும்பும் கட்சிகளுடனும் கலந்துரையாடுவார்கள்.

தற்போது இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம் மட்டுமே உள்ளது. இனப்பிரச்சினை இல்லாதது போன்றதும் அது முடிந்து விட்டது போன்றதுமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சசினை தீரககப்பட்டால்தான் அது சாத்தியம் என்ற விடயம் இருக்கின்றது. அதனைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு நாம் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். எனவே, இந்த மாத இறுதிக்கிடையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கலந்துரையாடுவோம்.” – என்றார். (அ)

## கெஹலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்பின்னர் குறித்த சந்தேகநபர்கள் இன்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அங்கு முதலாம், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஐந்தாவது சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 10 ஆம் மற்றும் 11 ஆம் சந்தேக நபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி பிணை வழங்குவதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

## பரஸ்பர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவர் தொடர்பான தகவல்களைப் பொலிஸாருக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் வழங்குமாறு அவர் ஆலோனை வழங்கியுள்ளார்.

உயிரிழந்தவர், விமானப் படையின் ரக்பி குழுவில் சேவையாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் ஹொரணையில் நேற்று இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தின் சந்தேகநபர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி சந்தேகநபர் விடுமுறையில் இருந்தபோது இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்று விமானப் படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் பாதுக்கை – மீரியகல்ல பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின்போது அங்கமுவ பகுதியில் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த சந்தேநபரை, வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர்.

அதனைப் பொருட்படுத்தாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபர், பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளார்.

இதன்பின்னர் பொலிஸாருக்கும் சந்தேநபருக்கும் இடையில் பரஸ்பரத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த சந்தேகநபர், பாதுக்கை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

ஹொரணை – மொரகஹஹேன பகுதியில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி 2 பேர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரியே இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## வாக்குப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறுவதைப் போன்று காணப்படுகின்றது.

அனுரகுமார திசாநாயக்க வடக்கு கிழக்கை பிரித்தவர். இரண்டாவது – தன்னுடைய பதவியை ராஜினாமா செய்து எமது நிலைப்பாட்டை குழப்பியவர். இதனை ஒருவரும் மறந்துவிடக்கூடாது. இதனை எல்லாம் அவர் கடந்து வருகின்றார். இங்கே அதில் ஓர் உண்மை உள்ளது. தமிழர் மக்கள் நடந்ததை மிக விரைவில் மறந்து விடுவார்கள். இந்த முறை மறந்துவிட மாட்டார்கள்!

நான் மாத்திரம் அல்ல எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும்! தங்களுடைய வாக்குகள் சிதறடிக்க கூடாது. எக்காரணம் கொண்டும் தென்னிலங்கையை சேர்ந்தவருக்கு நாம் வாக்களிக்கக்கூடாது.

இது தொடர்பில் இளைஞர்களுக்கு உரிய அரசியல் தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டும். கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ச சிங்கள வாக்குகளால் மாத்திரமே தான் வெற்றி பெற்றதாக மார்தட்டி பேசினார். அவருடைய நடவடிக்கைகள் அவரை பதவியால் துரத்தச் செய்தன.

சஜித் பிரேமதாசாவினை எடுத்து நோக்குங்கள். முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். அதனைக் கண்டும் காணாமல் இருக்கின்ற சஜித் பிரேமதாச இன்று தென்னிலங்கை வாக்குகளை பெறுவதற்காக ஈஸ்டர் தாக்குதலை பற்றி கூடுதலாக பேசுகின்றார். அது எவ்வாறு இரட்டை வேடம் போட முடியும்?

அங்கே தென்னிலங்கையிலே ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையை கோருகின்ற சஜித் பிரேமதாச முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பிலும் சர்வதேச விசாரணையை கூற முடியாதது ஏன்? காணாமல் போனோர் தொடர்பில் மௌனம் காப்பது ஏன்? அவர்களுக்கான நீதித் தொடர்பில் கதை பேசாது இருப்பது ஏன்?

2019 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு நல்ல ஒரு தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் சஜித் பிரேமதாசாவிற்கு வாக்குகளை அள்ளிக் கொடுத்தோம். அன்றிலிருந்து கூட தனக்கு இவ்வளவு மக்கள் ஆதரவளித்தார்களே என்று இந்த மக்களுக்காக குரல் கொடுக்கவில்லை.

அண்மையில் வெடுக்குநாறிமலை விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் தனது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தார். எது எவ்வாறாயினும் தேர்தலில் இவர்கள் தமிழ் மக்கள் சார்பில் கேள்விகளை கேட்டால் சிங்கள பெரும்பான்மை இவர்களை உதறித் தள்ளிவிடும். பதவிக்கு வந்தால் கூட தமிழர்கள் மீதான உரிமைகளை வழங்குவதில் இவர்கள் காலத்தை தாழ்த்துகிறார்கள் இதற்கு உதாரணம் கடந்த 70 வருடங்கள்.

இந்த பொது வேட்பாளர் தொடர்பில் பல பேர் பல வியாக்கியானங்களை கூறலாம். சேர்ந்து நில்லுங்கள் – சேர்ந்த பெற்றுக் கொள்ளுங்கள்! என பலர் கூறலாம். நாங்கள் சேர்ந்து அரசாங்கத்துடன் பயணிக்கவில்லையா? நல்லாட்சிக் காலத்தில் எவ்வளவு விடயங்களை நாங்கள் மேற்கொண்டும் ஏமாற்றப்பட்டோம்.

இந்தியாவாக இருக்கலாம் வெளிநாட்டுத் தூதர்களாக இருக்கலாம் இது தொடர்பில் கதைப்பதற்கு வருவார்கள்! முதலில் அவர்கள் கதைப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. காரணம் சந்திரிகாவின் காலம் முதல் தமக்குத் தேவை ஏற்படுகின்ற பொழுதெல்லாம் இந்த நல்லிணக்க பேச்சுக்கள் ஆரம்பமாகும். ஒவ்வொரு முறையும் இந்த சர்வதேசம் வெளிநாடுகள் சிங்களப் பெரும்பான்மை அரசிற்கே தமது ஆதரவினை வழங்கி வருகின்றது. பாருங்கள் ஜெனிவா விடயம் இழுத்தடிப்பு செய்யப்பட்டு கொண்டே செல்கின்றது. ஒரு முடிவு கிடைக்கப்பெற்றதாக இல்லை!

இப்பொழுது தேர்தல் காலம் வருகின்றது அங்கே ரணில் வருகின்றார். ரவிகருணாநாயக்க வருகிறார். சஜித் பிரேமதாசர வருகின்றார். திசாநாயக்கமும் வருகின்றார். அனைவரும் தங்களுடைய தேவைகளை ஒட்டி யாழ் மக்களிடம் வாக்குப் பிச்சை எடுப்பதற்கு வருகின்றார்கள். அவர்களுக்கு முதுகெலும்பியிருந்தால் முதலில் எங்களுடைய பிரச்சனைகளை விளங்கிக் கொண்டு அதற்குரிய தீர்வுகளை வழங்க வேண்டும்

கடந்த தேர்தல்களில் தென்னிலங்கை சேர்ந்தோருக்கு வாக்களித்து மாபெரும் தவறினை நாம் இழைத்திருந்தோம். எந்தக் கட்சி கேட்டாலும் தமிழ் மக்கள் சிந்தித்து முடிவெடுங்கள். அது எந்த கட்சியாகவும் இருக்கட்டும். தற்பொழுது இந்த பொது வேட்பாளருக்கு பல பெயர்கள் அடிபடுகின்றது. அது எந்த வேட்பாளராகவும் இருக்கட்டும். மக்களால் ஏற்றுக் கொள்ளக் ஏற்றுக்கொள்ளக் கூடியவராக சிறிதளவேனும் அரசியல் ஈடுபாடு உடையவராக இருக்க வேண்டும்! நிச்சயமாக தமிழ் மக்களால் ஒரு பொது வேட்பாளரை தேர்ந்தெடுக்க முடியும்! அதனை தொடர்ந்து நாம் அடுத்த இலக்கு நோக்கி பயணிக்கலாம்.

அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு வகையில் இந்த பொதுவேட்பாளர் குறித்து பேச தொடங்கியுள்ளன. தமிழரசு கட்சி தொடர்பில் இன்னமும் பேசவில்லை. தமிழரசு கட்சி என்ன சொல்கின்றதோ எனக்குத்

(4ஆம் பக்கம் பார்க்க..)



# இலங்கையில் பணிபுரியச் சிறந்த இடமாக நிப்பொன் பெயின்ட் நிறுவனம் அடையாளம்








நிப்பொன் பெயின்ட் ஆனது, 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் துறையின் உயர்மட்ட பணியிடங்களுக்கிடையில், சிறந்து விளங்கும் ஒரு கலங்கரை விளக்கமாகப் பிரகாசிப்பதாக பாராட்டப்பட்டுள்ளது.

அர்ப்பணிப்பு, புத்தாக்கம் மற்றும் அதன் பணியாளர்களுக்கான கவனமெடுப்பு ஆகியவற்றுடன், தொடர்ந்து பணியிடச் சிறப்பு மற்றும் பணியாளர் திருப்திக்கான தரத்தை நிப்பொன் பெயின்ட் நிறுவனம் கொண்டு விளங்குகிறது.

இலங்கையில் பணிபுரியச் சிறந்த இடமாக அடையாளப்படுத்தப்படுகிறது.

## றமழான், சித்திரை பண்டிகைகளை முன்னிட்டு கடற்கரைகள் சுத்திகரிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித றமழான் நோன்பு பெருநாள் மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகை என்பவற்றை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸின் மேற்பார்வையில் திண்மக் கழிவகற்றல் மற்றும் வேலைத் தொழிலாளர்கள் இணைந்து இன்று முதல் இச்சுத்திகரிப்புப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.



இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.




## மாளிகைக்காடு அல்-ஹுஸைன் வித்தியாலயத்தில் அதிபர் நளீரின் நினைவு மலர் வெளியீடும் இப்தாரும்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு.கமு. அல்- ஹுசைன் வித்தியாலயத்தில் மூன்று தசாப்தங்களாக கல்வி பணியாற்றிய அதிபர் மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களது நினைவாக 'அடையாளம்' எனும் பெயரில் நினைவு மலர் வெளியீடும், இப்தார் நிகழ்வும், பாடசாலை மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் திறந்த வெளியரங்கில் அதிபர் ஏ.சி.எம். நளீம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டு மறைந்த அதிபர் மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களின் நினைவுகள் தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வின் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் கலந்து கொண்டதுடன் விசேட அதிதியாக மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீரின் புதல்வர் எம்.ஏ.என். சுஹாத் ஹம்டியும், கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ், பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபீர், சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர் அரபாத் முஹிதீன், முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம். முக்தார், பாடசாலை ஸ்தாபக அதிபர் ஏ.எம். இப்ராஹீம், நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், அரச உயர் அதிகாரிகள், பிராந்திய பாடசாலைகளின் முன்னாள் மற்றும் இந்நாள் அதிபர்கள், அரச உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது அஷ்ஷெய்க் மௌலவி ஏ.கே.எம். சமீர் துஆ பிரார்த்தனை நடத்தினார்.

# விவாதத்திற்கு தயார் என சஜித் கூறியுள்ளதால் அனுரவின் கட்சிதான் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டும்!

## ஐ.ம. சக்தி பொதுச் செயலாளர் மத்தும பண்டார தெரிவிப்பு



பொருளாதாரத்தை எவ்வாறு வெற்றி கொள்வது என்பது தொடர்பில் அனுர குமார திசாநாயக்கவுடன் விவாதம் புரிவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தயாராக இருப்பதாகவும், விவாதத்திற்கான இடம் மற்றும் திகதியை அறிவிப்பது அனுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பொறுப்பாகும் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இந்த விவாதத்தை தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் நடத்துவதன் மூலம் மக்கள் எளிதாக பார்வையிட முடியும் எனவும், எனவே தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள் விவாதம் நடத்துவதற்கான இடம் மற்றும் நேரத்தை விரைவில் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவிடம் விவாதத்திற்கு வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி பொருளாதார விசேட குழு அழைத்ததாகவும், ஆனால் அவர்கள் அதற்கு பதிலளிக்கவில்லை எனவும், சஜித் பிரேமதாசாவே விவாதத்திற்கு வர வேண்டும் என அவர்கள் கோரியதாகவும், அதன்படி தாம் விவாதத்திற்கு தயார் என இப்போது சஜித் பிரேமதாச தெரிவித்துள்ள நிலையில், விவாதம் நடத்த வேண்டிய தொலைக்காட்சி சௌனல் மற்றும் நேரம் மட்டுமே அறிவிக்கப்பட வேண்டியுள்ளது, அது தேசிய மக்கள் சக்தியின் கையிலேயே தங்கியுள்ளது எனவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் சவாலை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக் கொள்ளவில்லை, ஆனால் அவர்களின் எதிர் சவாலை தமது கட்சி உடனடியாகவே ஏற்றுக்கொண்டுள்ளது, எனவே, விவாதத்திற்கான சவாலை ஏற்றுக்கொண்டு தேசிய மக்கள் சக்தியே அதற்கான ஏற்பாடுகளை செய்து அது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு அறிவிக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெசி-22)

# தேர்தல்களை காட்டி அரசாங்கம் சூதாட்டம் புரிகின்றது! அவர்களுக்கு வெற்றியில் நிச்சயமின்மை தெரிகின்றது

## ம.வி.முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் லால் காந்த



அரசாங்கம் மூன்று தேர்தல்களை காட்டி சூதாட்டத்தில் ஈடுபடுவதாகவும், எந்த தேர்தலை நடத்துவது என்பதை அரசாங்கம் உடனடியாக நாட்டுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அதன் பின்னரே தமது கட்சியின் கொள்கையை முன்வைக்க முடியும் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

'திசை காட்டி'யின் கொள்கை பிரகடனம் என்ன, மக்களுக்கு அது எவ்வாறான நிவாரணங்களை வழங்கும் எனவும் தற்போது மக்கள் கேட்கின்றனர் எனவும் லால்காந்த குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகிய மூன்று தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும், எந்த தேர்தலை அரசாங்கம் முதலில் நடத்தும் என்று கூறாமல் இருப்பதன் மூலம் அவர்களது வெற்றியில் நிச்சயமற்ற தன்மை தெளிவாகத் தெரிகின்றது.

குறிப்பாக,நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக சூழலுக்கு ஏற்ப திசைகாட்டியின் கொள்கை பிரகடனம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்கள் இதில் உள்ளடங்கி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-24)




# பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சீருடையை அணிந்து ரி56 துப்பாக்கிகளுடன் 'கெடேட்' பயிற்சியில் மாணவர்கள்

## சட்ட நடவடிக்கைக்கு மூத்த அதிகாரியொருவர் கோரிக்கை

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள் பயன்படுத்தும் சீருடையை அணிந்து ரி56 துப்பாக்கிகளை ஏந்தியவாறு கம்பஹா பிரதான பாடசாலையின் 'கெடேட்' குழுவொன்று அணிவகுப்பில் கலந்துகொண்ட சம்பவம் தொடர்பில் கம்பஹா தலைமையக பொலி ஸார் நேற்று (07) விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் சீருடைக்கு நிகரான ஆடைகளை அணிந்து அணிவகுப்பில் கலந்து கொண்ட இந்த மாணவர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் பயன்படுத்தும் அதே துணியையே பயன்படுத்தி சீருடையை தயார் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக, இந்த சீருடைகள் தைக்கப்படும் அனுராதபுரத்தின் துணிக் கடை ஒன்றின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சீருடை அணிந்த மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் (டிக் டொக்) தோன்றியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் சீருடை தயாரித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை 'கெடேட்'களுக்கு இரண்டு வகையான அங்கீகரிக்கப்பட்ட சீருடைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், ராணுவம் அல்லது சிறப்புப் படையின் சீருடைகளை பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை எனவும், இது தவறான முன்னுதாரணமாகும் எனவும், இதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

'கெடேட்' அணிவகுப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளின் போது 'கெடேட்'களுக்கு புள்ளி 2.2 ரக வெடிமருந்துகளை மட்டுமே சுடக்கூடிய தனியான அரை தானியங்கி ஆயுதமே வழங்கப்படுவதாகவும், எனினும் இந்த மாணவர்கள் ரி56 துப்பாக்கிகளை கையில் ஏந்தியவாறு பயிற்சி அணிவகுப்பில் கலந்து கொண்டமை சிக்கல் மிக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முழுமையான போர்ப் பயிற்சி பெற்ற பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி ஒருவருக்கே தானியங்கி துப்பாக்கி வழங்கப்பட வேண்டும் எனவும், பாடசாலை மாணவர்களுக்கு இந்த ஆயுதங்கள் யாருடைய தேவையின் பேரில் வழங்கப்பட்டுள்ளன என்பது குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெசி-26)

## வாக்குப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியாது. என்னுடைய நிலைப்பாடு பொது வேட்பாளர்

ஒருவர் நிறுத்தப்பட வேண்டும். இது குறித்து நான் மூன்று நான்கு மாதங்களுக்கு முதலில் சிலருடன் இது தொடர்பில் பேசி இருந்தேன்.

தமிழரசு கட்சிகடந்த காலங்களில் எடுத்த முடிவு அனைத்துமே சரி என்று நான் சொல்லவில்லை. எனவே, இந்த முறை அனேகமாக பொது வேட்பாளரை ஆதரிப்பார்கள் என்று தான் நினைக்கின்றேன். வடக்கு கிழக்கில் மேலோங்கி இருக்கும் தமிழரசுக் கட்சி தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும். அதன் அடிப்படையில் நல்ல முடிவு ஒன்று எட்டப்படும்!

இலங்கை தமிழரசு கட்சி பல முடிவுகள் ஆரம்பகாலத்தில் எடுத்தும் அது சாதகமாக எமக்கு ஏற்றது போல் அமையவில்லை. சரத் பொன்சேகவிற்கு ஆதரவளிப்பதாக எடுத்த முடிவு பிழையாகப் போனது. சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவளிப்பதாக எடுத்த முடிவு பிழையாக போனது. ஆகவே, இந்த முறையும் அவ்வாறான தவறுகளை கட்சி விடாது என நம்புகின்றேன்.

ஆதரவளித்தவர்களும் தமிழர்களுக்கு உரிய தீர்வினை வழங்கும் பதில் எவ்வளவு தூரம் பயணித்தார்கள் என்ற கேள்வியும் இருக்கின்றது. எனவே, இனி இவ்வாறான முடிவு எடுக்கப்படுகின்ற பொழுது அதனை கேட்பதற்கு மக்களும் தயாராக இல்லை! கட்சி உறுப்பினர்களும் தயாராக இல்லை!

ஆகவே, திடகாத்திரமாக தமிழ் மக்கள் இம்முறை பொது வேட்பாளர் ஒருவருக்கு தங்களுடைய வாக்குகளை அளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (01,04)



# சம்மாந்துறை வலயத்தில் நூல் வெளியீட்டு விழா

(காரைதீவுச் செய்தியாளர் )

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் வருடாந்த அமுலாக்க திட்டம் என்ற நூல் வெளியீடு, திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் செய்யட் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

இந் நூல் வெளியீட்டுவிழாவில் சம் மாந் துறை வலயக் கல் விப பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத் மொகைடீன், திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், அப்துல் மஜீத், எச். நைஷரூஸ்கான், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.நதீர், பி.பரமதயாளன், யூஎல்.மகுமூட்லெவ்வை, கணக்காளர் சீ.திருப்பிரகாசம், ஆசிரியர் பயிற்சி நிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன், பாடசாலை வேலைகள் அதிகாரி இ.ஏகாம்பரநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வலய வருடாந்த அமுலாக்கத்திட்ட கைநூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

விழா நிகழ்வுகளை உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நல்லூரில் வாழும் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஆராய விசேட குழு!

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் அமைப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நல்லூரில் வாழும்

பழங்குடியின மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்க திருகோணமலை அரசாங்க அதிபருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமான்உத்தரவிட்டுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அண்மையில்திருகோணமலையில்உள்ள ஆளுநர்செயலகத்தில்கிழக்கு ஆளுநரிடம் நல்லூரில் தங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை குறித்து முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து நல்லூர் பிரதேசத்தை ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு, வெளி ஆக்கிரமிப்பாளர்களால் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது குறித்து ஆராய்ந்ததுடன் பழங்குடியின மக்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்பின்அவர்களின்பிரச்சினைகளை ஆராயவும், பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் உடனடியாக குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவிக்கு பாடசாலையில் வரவேற்பு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

தேசிய மாணவர் நாடாளுமன்றத்தில் “பௌதீக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ” அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட எம்.அனபாவிற்கு கமு.அக். கரடிக்குளம் ற/ஹமானியா வித்தியாலயத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்போது அதிபர்கருத்து தெரிவிக்கையில், இந்த வெற்றி மூலம் நமது பாடசாலை எதிர்காலத்தில் சர்வதேச மட்டத்தில் செல்ல வேண்டும். அதற்காக எதிர்காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும், என குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் கே.எம். முனாஸ், பிரதி அதிபர் ஏ.எல். அன்சார், உப அதிபர் யு.ஏ.இப்றாஹிம், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் ஏ.எச். இம்றான் ஹுஸைன் (பொறுப்பாசிரியர்) , மாணவியின் தந்தை ஏ.எல். மஹ்ஷரூப், பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க பிரதி நிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.






# ஊட்டச்சத்துக் குறைபாடு திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்புப் பயிற்சிப் பட்டறை

(சர்ஜ/ன் லாபீர்)

ஊட்டச்சத்து குறைபாடுக்கான நிபுணத்துவ சார் செயற்றிட்டத்தை உருவாக்குதற்கான திறன் மேம்பாட்டு திட்டம் தயாரிப்பது சம்மந்தமான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை அண்மையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிக்காட்டலுக்கமைய சம்மாந்துறை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையின் பிரதான வளவாளராக பொருளியல் துறை கலாநிதியும் சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளருமான ஏ.எல்.எம் அஸ்லம் கலந்து கொண்டார். மேலும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எல்.ஐ கபீர், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் வலுவூட்டல், சமூக நலத்திட்டங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான சமாதானத் தூதுவர்கள் அமைப்பின் பணிப்பாளர் ஏ.எஸ்.எம் அறூஸ், விவசாய போதனாசிரியர் எம்.நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ், பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் ஐந்தாண்டுச் செயற்திட்டம் தயாரிப்பது மற்றும் ஏனைய பல விடயங்கள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டது.

# நல்லூரில் சிறப்புற இடம்பெற்ற சிந்தனை அரங்கம்





அறிவாலயம் ஆளுமை விருத்தியக ஏற்பாட்டில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச் சுடர் இராமலிங்கம் பங்கேற்க சிந்தனை அரங்கம் கடந்த சனிக்கிழமை மாலை செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரனின் முன்னிலைப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார்

தமிழி அமைப்பின் பெருந்தலைவர் நிகேதன் வரவேற்புரை ஆற்றினார்

நிகழ்வில் இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச் சிறப்பாக செப்பனிடுவது எந்தச் சூழல்? என்ற வகையில் வீட்டுச் சூழலே என தென்னாடு பத்திரிகை ஆசிரியர் ஜீவா சஜீவனும், கல்வி சூழலே என கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கிளிநொச்சி அபிராமியும், நட்புச் சூழலே என பேராதனை பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் சாரங்கனும், சமுதாயச் சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை யோகேஸ்குமாரும் கருத்துரைத்தனர்.

இலக்கியச் சுடர் இராமலிங்கம் நடுவராகச் செயற்பட்டார். இலக்கியச் சுடரை கல்விக் காருண்யன் ஈ எஸ் பி நாகரத்தினமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கு.பாலசண்முகனும் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

நிகழ்வில் நூற்றுக் கணக்கான இலக்கிய ஆர்வலர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

# வட பகுதியில் வெண் ஈ தாக்கம் அதிகரிக்கிறது தண்ணீரைக்கூடப் பயன்படுத்த அச்சத்தில் மக்கள்







கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வெண் ஈ தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பழைய வட்டக்கச்சி பகுதியில் தனியார் ஒருவரது காணியில் தென்னை முற்றுமுழுதாக வெண் ஈ தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவரது வீட்டில் பயன் பெற்று வந்த வாழை மற்றும் பூ மர வகைகள், தோடை, எலுமிச்சை, வாழை மற்றும் நாளாந்தம் பயன்படுத்தும் தண்ணீர் கூட பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக முறையிட்டுள்ளார்.

வெண் ஈ தாக்கம் மிகவும் அதிகரித்துள்ளதாகவும் தரையில் வரும் புற்களில் கூட பரவி சுவாசிக்ககூட முடியாத நிலையில் வெண் ஈ தாக்கம் அதிகரித்து காணப்படுவதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதியில் நேரில் வந்து பார்வையிட்டு தமக்கு உரிய தீர்வினை பெற்று தர வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வவெண் ஈ தாக்கத்தின் காரணமாக தண்ணீரைப் பயன்படுத்துவதால் நோய்த் தாக்கம் ஏற்படலாம் என அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், தமது கிணற்றில் உள்ள தண்ணீரை பலர் நாளாந்த தேவைக்காக பயன்படுத்தி வருவதாகவும் எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர் கோரிக்கை விடுத்துள்ளார்.









## வசதி குறைந்த மாணவர்களுக்கு பாதணிகள் இன்று வழங்கிவைப்பு

(காரைதீவு நிருபர்)

காரைதீவிலுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம் “ஒஸ்கார்” ஒரு தொகுதி பாதணிகளை வழங்கிவைத்தது.

காரைதீவு விக்னேஸ்வரா வித்தியாலயம், விஷ்ணு வித்தியாலயம் மற்றும் கண்ணகி இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க இந்நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் விபுலமாமணி தேசமான்ய வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி கருணாநிதி, வேலுப்பிள்ளை உதயகுமார் ஆகியோர் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தனர்.

ஒஸ்கார் சார்பில் ஆசிரியர்களான கே.லோகநாதன், இ.இரத்தினகுமார் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

குறித்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் இவ்வுதவியை நல்கிய ஒஸ்கார் அமைப்பிற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

## ரஹ்மத் பவுண்டேசனால் மாவடிப்பள்ளியில் உலர் உணவுப் பொதிகள் விநியோகம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித ரமழானை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி பிரதேச ஜம்மியதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.றியால் ஹாமி மூலம் அடையாளப்படுத்தப்பட்ட பயனாளர்களுக்கு YWMA மற்றும் CSMWA பேரவைகளின் ஒருங்கிணைப்பில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாவடிப்பள்ளி அல்-அஷ்ரஃப் மகா வித்தியாலய ஹுஸைன் ஞாபகார்த்த மண்டபத்தில் சனிக்கிழமை (06) இடம்பெற்ற விநியோக நிகழ்வில் பவுண்டேசன் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவடிப்பள்ளி ஜம்மியதுல் உலமா தலைவர் ஏ.எம்.முஹம்மது தம்பி மௌலவி, மாவடிப்பள்ளி ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகசபைத்தலைவர் வை.ஏ.மனாப் உட்பட ஊர்ப்பிரமுகர்கள், பயனாளிகள், பிரதேசவாசிகள் மற்றும் பவுண்டேசன் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
YOU CAN
EASILY
REGISTER
& ADD YOUR
VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!